# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி :10 மலர் :1 Plant :10 Flower 1 டிசம்பர் 2024 / December 2024

ஆண்டு சந்தா ரூ.50/- Annual Subscription Rs.50/- தனிபிரதி விலை ரூ.5/-





**அவசர ஜெப உதவிக்கு**

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

**94433-46119**

# ஆசிரியர் மனம்



எனக்கருமையான அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துதல் கூறி எழுதும் மடல் நலம். நலமறிய ஆவல்.

இம்மாதம் கிறிஸ்தவர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான மாதம். பலயோசனைகள் மக்களிடையே ஓடிக்கொண்டிருக்கும். எவ்விதத்தில் ‘‘கிறிஸ்துமஸ்’’ கொண்டாடுவது, எவ்விதத்தில் மனைவி பிள்ளைகளை திருப்தி படுத்துவது என குடும்ப தலைவர் யோசிக்கும் மாதம். தேவன் உங்கள் தேவைகளை நிச்சயம் சந்திப்பார். புதிய வருடத்தில் புதிய காரியங்களை செயல்படுத்த முனைவோம். ஜெபியுங்கள். ஒத்தாசையை அனுப்பும் தேவன், நிச்சயம் எல்லா தேவைகளையும் சந்திப்பார். உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்.

கர்த்தருக்குள் அன்பான சகோதர / சகோதரிகளுக்கு கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுவதாக.

கர்த்தருடைய வருகைக்கு முன் அடையாளமாக நடைபெறும் சம்பவங்களை பார்க்கும்போது ‘‘யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளை கேள்விப்படுவீர்கள்.....’’ ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்யத்திற்கு விரோதமாக ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்....... உங்களை கொலை செய்வார்கள். இவைகள் யாவும் சம்பவிக்கும். இது வேதனைகளுக்கு ஆரம்பம்’’ (மத். 24:6-9)

மேற்கூறிய சம்பவங்கள் நடைபெறுவதால் ஜெபம் அவசியம். குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது விழித்திருந்து இயேசு (அ) ஊழியருடன் ஜெபிக்க கூடாதா? (மத். 26 : 40).

சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள் (மத். 26 : 41). ஜெபமானது வெற்றியை தரும். காரியங்களை மாற்றியமைக்கும் நினிவே-யை அழிப்பேன் என்றவர் தன் கொள்கையை மாற்றிக்கொண்டார். (யோனா. 3:10) வணங்கா கழுத்துள்ள ஜனங்களை அழித்து போட தேவன் தீர்மானித்த போது திறப்பின் வாசலில் நின்ற மோசேவின் ஜெபத்தை கேட்ட தேவன், தீங்கை செய்யாதபடிக்கு பரிதாபங் கொண்டார் (யாத். 32 : 10 - 14). இந்நாளில் ஜெபம் குறைந்து காணப்படுகிறது. தயவு செய்து நாட்டிற்கான பாதுகாப்பு, தலைவர்களின் நலம், மக்களின் அழிவுக்கு காரணமான யுத்தம் நடைபெறாமல் இருக்க ஜெபியுங்கள்.

தேவவருகையில் சபை எடுத்துக் கொள்ளப்பட ஒரு ஜனக்கூட்டத்தை ஆயத்தபடுத்தவும். நாம் ஆயுத்தமாய் இருக்க ஜெபம் அவசியம் ஜெபியுங்கள். மாரநாதா’ ஆமென் அல்லேலுயா.

கர்த்தருக்கு சித்தமானால், கர்த்தருடைய வருகை தாமதிக்குமானால் மீள உங்களை சந்திக்கிறேன். அதுவரை தேவ கிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களின் அன்பு சகோதரி

(சாரா விமல்)

# கிறிஸ்துவா ! கிறிஸ்துமஸா?

எனக்கருமையான கர்த்தருடைய பிள்ளைகளே ! இந்த கிறிஸ்துமஸ் நன்நாளில் கிறிஸ்துவை நினைவு கூர்ந்து பார்த்து கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த உங்கள் யாவருக்கும் வாழ்த்துதல் கூறி எழுதும் மடல் நலம். நலமறிய அவா.

“நாட்கள் பொல்லாதவைகளனாதால் காலத்தை பிரயேஜனப்படுத்திக் கொள்ளுங்கள்” (எபேசி 5: 16)

“நாட்களை விசேஷித்துக் கொள்கிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்கிறான்.” (ரோமர் 14:6).

மேற்படி வசனங்களை படிக்கும்பொழுது காலம் பொல்லாததாயும், ஒவ்வொரு நாளும் தீங்கானவைகளை காணவும், கேட்க கூடியவர்களாய் இருக்கிறோம். இக்காலங்களை குறித்து வேதாகமம் கூறுவதை வாசிக்கும் போதும், பிரசங்கத்தை கேட்கும்போதும் ஆண்டவர் வருகையை பற்றிதான் எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. ஆயத்தப்படுங்கள் ! மற்றவர்களை ஆயத்தப்படுங்கள் என்ற நிலையில் உள்ளோம்.

கிறிஸ்துமஸ் என்றபோது கிறிஸ்துவின் பிறப்பை பற்றி பேசி மகிழ்கிறோம். இயேசு கிறிஸ்து என்கிற இரட்சகர் பிறந்தார் என்கிற சந்தோஷ நற்செய்தியை பிரசித்தப்படுத்துகிறவர்கள் ஒரு சிலர். மேலும் இப்பண்டிகையின் போது நம் ஈகையை வெளிப்படுத்தி கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துகிறவர் ஒரு சிலராய் உள்ளார்கள். இந்த மகிழ்ச்சியின் நாளில் அவரைப் பற்றி அவர் செய்த நன்மைகளையும், நமக்காக ஆயத்தப்படுத்தின உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்களை எத்தனை பேர் நினைவு கூறுகிறோம். அவர் நமக்காக பாடுபட்ட காரியங்கள் எத்தனை என்பதை தியானித்துள்ளோமா? கிறிஸ்துவா (அ) கிறிஸ்துமஸா? என்ற கேள்வி நம்மில் கேட்கப்படுமானால் எதை தேர்ந்தெடுப்போம். இம்மைக்கான சந்தோஷமா? மறு(கி)மைக்கான காரியமா? சிந்தித்து பார்ப்போம். இறுதிவரை நம்மை நிலை நிறுத்த வல்லவர்

இயேசுதான். அவர் வழங்கும் சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. அதுவே கிறிஸ்துமஸ், வருடததிற்கு ஒருநாள் பெரிய சந்தோஷம், ஆரவாரம் இப்படி மகிழ்ச்சிக்குள் கடந்து போகிறோம்.

உண்மையில் கிறிஸ்துவை ஆராதனை செய்கிறோமா என்றால் இல்லை. அந்நிய தேவர்கள் புறசமய வழிப்பாடு (அ) பண்டிகையை பின் தொடர்ந்து வந்த பண்டிகை தினமாக கருதப்படுகிறது. டிசம்பர் 25ந் தேதி இயேசு பிறந்தார் என வேதாகம குறிப்பு ஏதுமில்லை. சரித்திரபூர்வமாக டிசம்பர் 25ந் தேதி என்று கூற எந்த ஆதாரமும் இல்லை. பழங்கால ரோமாபுரியில் வேளாண்மை கடவுளுக்கு (Saturnalia) கொடுத்த விழா. மேலும் பெர்சியாவின் ஒளி கடவுள் வழிப்பாடும் சேர்ந்த நாட்களாகிய டிசம்பர் 17 முதல் 25 வரை. The Emperor Constantine - I AD 312-ல், சபை தலைவர்கள் கூடி அன்பை பிரதிபலிக்கும் விதத்தில் “புற ஜாதியாரின் வழிப்பாடுகளுடன் இணைக்கப்பட்ட விழாவாக கொண்டாடப் பட்டது. ரஷ்யாவில் (Orthodox Christmas) பழமைவாத கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறார்கள். அநேக நாடுகளின் கிறிஸ்துமஸ் ஜனவரி 6,7,19 தேதிகளில் கொண்டாடப்படுகிறது.

வேதத்தை ஆராய்ந்து பார்க்கையில் மந்தை மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கியிருந்த அந்த இராத்திரியில் கர்த்தருடைய தூதன் தோன்றி. இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். (லூக்.2:8-10).

நாம் எடுத்திருக்கிற கணக்கின்படி டிசம்பர் 25ஆம் தேதி Jewish (or) Hebrew Calendar படி ‘Chislev மாதமாகும். அதாவது 9ம் மாதமாக கணக்கிடப்படுகிறது. (Nov.- Dec.) அடுத்த மாதம் Tebeth மாதம் அதாவது 10ஆம் மாதமாகவும் நம் கணக்கில் ஜனவரி மாதமாகவும் கருதப்படுகிறது. (Dec. - Jan.) அதாவது கிறிஸ்துமஸ் 25ஆம் தேதியானது Chislev மாதம் பின்பகுதியும் (2nd Fortnight). Tebeth மாதத்தின் முற்பகுதி (1st Fortnight). இக்காலங்களில் மிகவும் மழை பெய்யும் காலம் (Rainy Season). இது சம்பந்தமாக வேதம் கூறுகிறதை கவனியுங்கள்.

“அது ஒன்பதாம் மாதம் இருபதாம் தேதியாயிருந்தது.

ஜனங்கள் எல்லோரும் தேவனுடைய ஆலயத்தின் வீதியிலே அந்த காரியத்தினாலும், அடை மழையினாலும் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்" (எஸ்றா.10:9)

எனவே மேற்படி வசனத்தையும் மாதத்தையும் ஒப்பிட்டு பார்க்கும்போது, மேய்ப்பர் வயல் வெளியில் இருக்க வாய்ப்பில்லை, நட்சத்திரம் தெரியவும் வாய்ப்பில்லை. எது எப்படியோ இயேசுவானவர் தீர்க்கதரிசனத்தின்படி பிறந்தார். மனுகுலத்தை மீட்க பிறந்தார். இரத்தம் சிந்தினார். பாவங்களை நீக்கி சுத்திகரித்தார். அவர் நாமத்தை இந்நாள் வரை பயன்படுத்தும்போது விடுதலையும், அற்புதமும் நடைபெறுகிறது. ஆமென். அல்லேலுயா.

"புறஜாதிகளுடைய மார்க்கத்தை கற்றுக் கொள்ளாதீர்கள். வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள்"

"ஜனங்களின் வழிபாடுகள் வீணாய் இருக்கிறது." (எரே.10:1)

"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும் ஏசாயா தீர்க்கதரிசியில் குறிப்பிடப்பட்டுள்ளது." (மாற்.7:7)

எனக்கருமையான சகோதரனே ! சகோதரியே ! எது எப்படியோ, கிறிஸ்துவா / கிறிஸ்துமஸ்ஸா? நமக்கு தேவை கிறிஸ்துதான். நாட்களை விசேஷித்துக் கொள்கிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்கிறேன்." (ரோமர்.14:6)

யோசுவா கூறுவது போல நானும் என்வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" (யோசு.24:15)

ஆம். கிறிஸ்துமஸ் நன்நாளில் அவர் பாடுகளையும் அவர் அன்பை நினைத்து கிறிஸ்துவை மையமாக வைத்து சந்தோஷமாக வாழ்வோம். இதனை வாசிக்கும் அன்பர்களே இந்த கிறிஸ்துமஸ் நன்நாளில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துதல் கூறி, தேவ சமாதானம் உங்களோடு இருப்பதாக. புதிய ஆண்டின் ஆசீர்வாதத்திற்கு நம்மை தகுதிப்படுத்தி கொள்வோமாக. ஆமென். அல்லேலுயா

# CGA சபையில் நடைபெறும் 2024 & 2025-ம் ஆண்டின் ஆராதனை

## 2024 முடிவாண்டின் ஆராதனை

நாள் : **31-12-2024**

நேரம் : **9.00** p.m.-**11.50** p.m.

செய்தியாளர் : சகோதரி. **சாரா விமல்**

## 2025-ம் ஆண்டின் புதுவருட ஆராதனை

### 2025-ம் ஆண்டில்...

செய்தியாளர் : **Rev. Dr. VICTOR VIMAL,** D.D.

நேரம் : **12 M.N. - 3.00** a.m.

- தேவன் வைத்துள்ள தீர்மானத்தை அறிய வாருங்கள்.
- தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தத்தைப் பெற வாருங்கள்.
- நாட்டு நடப்பு, உலக காரியம், அரசியல், இயற்கை இவைகளில் தேவசித்தம் என்ன என்பதை கேட்க வாருங்கள் !

**புது (2025) வருட ஆராதனை**
**12.00 Midnight - 3 a.m.**

வாருங்கள் !
பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

"நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக"

(உபா. 8:2)

## 2024–ம் ஆண்டிற்கு நன்றி செலுத்துவோமா ?

# நன்றி நவிலுதல் கூட்டம்

## (Thanks giving meeting)

**நாள் : 27.12.2024** **நேரம் : 6.30 p.m. – 8.30 p.m.**

**இடம் : CGA சபை, வேலூர்**

பங்கு பெற்று புதிய ஆண்டின் ஆசீர்வாதத்திற்கு தகுதிபெறுவோமாக

## ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am – 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am – 11.30 am |
| பிரதி செவ்வாய் | 7.00 pm - 8.00 pm ஊழியருடன் 1 மணி நேரம் ஜெபம் |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm – 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am – 12.00 noon |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am – 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm – 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm – 8.30 pm |

## CGA சபையின் 26–ஆம் ஆண்டு நிறைவு கூட்டம்

<u>இடம்</u> : **CGA சபை / வேலூர்**

<u>நாள்</u> : **20.12.2024**

<u>நேரம்</u> : **6.30 p.m. - 8.30 p.m.**

<u>செய்தியாளர்</u> : Rev. Dr. Victor Vimal D.D.,

சபையார் மற்றும் விசுவாச பிள்ளைகள் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெறுவீர்களாக.




***அன்பெனும் பண்புகளை***

***ஆணித்தரமாய் சொல்லிவிட***

***ஆயுளையே அவர் கொடுத்தார் !***

***அகிலத்தின் விடுதலைக்காக***

***அவர் பிறந்த நாளின்று***

***அறியாமை போக்கிடுவோம் !***


***பகைமையதை அறுத்தெறிந்து***

***பாசமோடு வாழ்த்திடுவோம் !***

**உங்கள் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை**

இப்படிக்கு
**கிறிஸ்துவுக்குள்**
**ஊழியரின் குடும்பம்**






# கண்டவைகளும் கேட்டவைகளும்




## தேவபெலன் விளங்கியது

என் பெயர் விஜி ஆனந்த். என்னுடைய அம்மாவை மூச்சுத் திணறல் காரணமாக முந்தைய வாரம் மருத்துவமனைக்கு கொண்டு போனோம். மருத்துவர்கள் பெட் ரெஸ்ட் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய அம்மாவுக்கு நடக்க முடியாத நிலையில் இருந்தது, அதன் பிறகு ஆக்சிஜன் குறைவாக மூச்சு விட கஷ்டமாக இருந்தது. நான் 2 நாட்களாக என் அம்மாவிடமும் இருந்ததினால் சுகம் பெலவீனமாக இருக்கும். அதே நேரத்தில் ஊழியக்காரரின் ஜெபத்தின் போது ஜெபித்து கொடுத்த எண்ணெயை பயன்படுத்தி வரும் வேளையில் நான் சுகமடைந்தேன். என் அம்மாவும் மருத்துவமனையில் 5 நாட்களில் பெலனடையும் செய்தார். ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை One Hour Prayerல் ஜெபம் செய்யவும் ஊழியக்காரரின் வார்த்தையின்படி என் அம்மாவுக்கு விடுதலையும் பரியூரண சுகத்தையும் கொடுத்தற்காகவும் தேவனுக்கு நன்றி. ஜெபித்த பாஸ்டருக்கும் நன்றி. ஆமென். அல்லேலுயா.

சகோதரி. **விஜி ஆனந்த்** - வேலூர்.

## ஜெபத்திற்கு பதில் தந்தார்

கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக மற்றும் ஸ்தோத்திரம்.

என் பெயர் ஸ்டெல்லா. கடந்த மூன்று மாதத்திற்கும் மேலாக எனக்கு கால் வலி காரணமாக பெலவீனம் அடிக்கடி வரும் (காலை தியான கூட்டத்தில்) பாஸ்டர் சொல்லிய தீர்க்க தரிசன வார்த்தைகள் மற்றவர்களுக்கு என நினைத்தேன். ஆனால் எனக்கு வரும் என்று நினைக்கவில்லை. ஆனால் பல கஷ்டங்கள் படுகின்றேன் என்று பாஸ்டரிடம் கூறி ஜெபிக்க கூறினேன். அவரும் ஜெபம் செய்தார். அதன்பிறகு நான் சுகமானேன். எனக்கு முற்றிலுமாக கால்வலி இல்லாமல் போனது. கர்த்தருக்கு நன்றி. பாஸ்டருக்கும் நன்றி.

சகோதரி. **ஸ்டெல்லா** - வேலூர்.

## சொன்னபடி செய்தார்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

என் பெயர் லாரன்ஸ். நான் செப்டம்பர் 19ஆம் தேதியில் அமெரிக்கா நாட்டிற்கு வேலையின் காரணமாக கிளம்பி சென்றிருந்தேன். பிறகு 2

மாதம் கழித்து நான் இந்தியாவிற்கு திரும்பி வந்திருக்கிறேன். நிறைய சாட்சிகள். அதில் ஒருசில சாட்சிகள் சொல்ல விருப்பப்படுகிறேன். நான் கிளம்பும் போது சென்னையில் ஏர்போர்டில் இருக்கும் காவல் அதிகாரிகள் பல கேள்விகள் கேட்டபொழுதிலும் அதன் பிறகும் அமெரிக்கா தேசத்தில் இருக்கும் காவல் அதிகாரிகள் பல கேள்விகள் கேட்டார்கள். அதெல்லாம் கடந்து நான் என்னுடைய பணிக்கு சென்றேன். இந்த சாட்சியில் முக்கியமாக என்னவென்றால் போதகர் சென்னையில் நான் இருந்த போது எனக்காக ஜெபம் செய்தார். அவருடைய வார்த்தையில் அங்கிருக்கும் காவல் அதிகாரிகள் இடமிருந்து கடந்து சென்றுவிடுவீர்கள் என்று சொன்னார். பாஸ்டர் சொன்ன வார்த்தையின் படி நடந்தது. அதன் பிறகு, என்னுடைய பணியின் காலம் இன்னும் 2 மாதம் இருக்க வேண்டியது. ஆனால் நான் சீக்கிரமாக இந்தியாவிற்கு வரனும் என்று பிரயாசப்பட்டேன். திரும்பி போதகரிடம் ஒரு ஆலோசனை கேட்கலாம் என்று தொலைபேசி மூலம் பேசும்போது அவர் ஜெபம் செய்து விட்டு, முயற்சி எடுத்து பாருங்கள் என்று கூறினார். அப்புறம் என்னுடைய மேல் அதிகாரியிடம் கேட்டபொழுது அவர் சொன்னது குடும்பம் முதலில் என்று சொன்னார். தேவன் அதிகாரிகளின் கண்களில் தயை ஏற்படுத்தி, நான் இந்தியாவிற்கு வர வாய்ப்பு கொடுத்தார். அதற்காக தேவனுக்கும் நன்றி. பாஸ்டருக்கும் ஜெபம் ஜெபித்ததற்காக 2 சாட்சிகளுக்கு கொடுத்ததற்காக நன்றி.

சகோ. **லாரன்ஸ்** - வேலூர்.

என் பெயர் இம்மானுவேல். என்னுடைய மகன் பெயர் ஜோசுவா. மனைவியின் பெயர் ஷோபனா. நாங்கள் திருச்சியில் இருந்து வருகிறோம். எனக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் திருமணமாகியது. எங்களுக்கு 1 வருடமாக குழந்தை இல்லை இல்லை. அப்பொழுது நான் பெங்களூரில் பணிக்கு சென்றிருந்தேன். அதன் பிறகு பாஸ்டர் அவர்களிடத்தில் நான் ஜெபிக்கும் நேரத்தில் குழந்தை பிறக்கும் எனவும், உங்களுக்கு சுகபிரசவத்தில் குழந்தை பிறக்கும் என்று கூறினார். ஆனாலும் அநேக மருந்துகளும் எடுத்தும் தேவன் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தின காரணமாக சுகபிரசவத்தில் குழந்தை பிறந்தது. பிறந்த சில நாட்கள் கழித்து இடது சிறுநீரகத்தில் (Urine) தேங்குகிறது என மருத்துவர் கூறினார். (CMC) அநேக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற நேரத்தில் நான் பாஸ்டரிடம் சொல்லி ஜெபித்தேன். குழந்தைக்கு ஒன்றும் ஆகாது என்று சொன்னார். தேவனுடைய வார்த்தையின் நிமித்தம் தேவன் பாதுகாப்பார் என்று சொன்னார். தேவன் சுகம் கொடுப்பார் எனவும் சொன்னார். குழந்தைக்கு ஜோசுவா ஒன்றுமில்லாமல் சுகம் பெற்று வருகிறான். குழந்தை பிறக்கும்போது சிறுநீரகத்தில் (12 ml) இருந்தது. அதன் பிறகு பாஸ்டரிடம்

ஜெபிக்கும்போது 1 வருடம் கழித்து (6 ml) இருந்தது, தற்போது இந்த வருடம் (4 ml) ஆக படிப்படியாக குறைந்து மருத்துவமனையில் பரிசோதித்தபோது குறைவது தெரிந்தது. பிறகு எந்தவொரு தீங்கும் இல்லாமல் ஏற்படாமல் கர்த்தர் பாதுகாத்தார். கர்த்தருக்கு நன்றி. என்னுடைய மகன் ஜேசுவாவிற்கு கடுமையான உடல்நிலை பாதிக்கப்பட்டு 2 நாட்களாக கஷ்டப்பட்டு இருந்தார். மருத்துவர்கள் அந்த நாட்களில் போராட்டம் நடந்து வருகிற நேரத்தில் குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற போது மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கவில்லை. திடீர் என்று மூச்சு பேச்சு இல்லாமல் போய் விட்டான். குழந்தையின் கண் மேலே போய்விட்டது என்று கூறின போது அந்த நேரத்தில் நானும், என் வீட்டாரும் கண் கலங்கி நிற்கிறோம். என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தபோது என் அப்பா தொலைபேசி மூலம் பாஸ்டரிடம் பேசினார். அப்பொழுது பாஸ்டர் ஜெபம் செய்துவிட்டு கண் திறந்து சுகமாவதை காண்கிறேன் என்றார். பாஸ்டர் ஜெபித்து சொன்ன அதே நேரத்தில் குழந்தை சுகமாகவும், பெலனடையவும் கர்த்தரின் வார்த்தையின் நிமித்தமும் குழந்தை சுகமாக ஒரு அதிசயம் நடந்தது. ஜெபித்த பாஸ்டருக்கு நன்றி. கர்த்தருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

Bro. **Immanuel,** Trichy.

## CGA Church Service and Live Streaming Schedules are given below in Indian Timings - IST

Every Day Tamil Msg-Live Streaming - 7 am to 8 am & 7 pm to 8 pm

SUNDAY SERVICE (TAMIL) : Every Sunday - 9am to 11.30 am

BIBLE STUDY : Every Wednesday - 7.30 pm to 8.30 pm

FASTING & DIVINE HEALING MEETING :

2nd Saturday of the Month - 10.00 am to 2.30 pm

TARRYING MEETING :

4th Saturday of the Month - 7.30 pm to 8.30 pm

MORNING DEVOTION :

1st Day of the Month - 5.00 am to 6.00 am

# 'தேடுங்கள் கண்டடைவீர்கள்'

ஐ கொரியந்தியர் **6–ம்** அதிகாரத்திலிருந்து **16–ம்** அதிகாரம் வரை உள்ள பகுதியிலிருந்து கேள்விகள் எடுக்கப்பட்டுள்ளது :

1. அந்நிய பாஷை யாருக்கு அடையாளமாயிருக்கிறது ?
2. எதற்கு விலகி ஓடவேண்டும் ?
3. எதினிமித்தம் எங்கள் பிரசங்கமும் விருதா, அதுபோன்று விசுவாசமும் விருதா என்று பவுல் குறிப்பிடுகின்றார் ?
4. மனைவிகளுள்ளவர்கள் மனைவிகள் இல்லாதவர்கள் போல இருக்க வேண்டும் ஏன் குறிப்பிடப்பட்டு இருக்கிறது ?
5. எப்பொழுது வெண்கல ஓசையையும், கைத்தாளமும் போலவும் இருப்பேன் ?
6. எதினிமித்தம் பெலவீனமுள்ள சகோதரன் கெட்டுப் போவான் ?
7. யாருக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை ?
8. மனைவியை கூட்டிக் கொண்டு ஊழியத்துக்கு சென்ற அப்போஸ்தலன் யார் ?
9. ஆண்கள் மயிரை நீளமாக வளர்க்கலாமா ? ஏன்?
10. ஒரே நாளில் இருபத்தி மூன்றாயிரம் பேர் விழுந்து போனது எங்கே ? ஏன் ?
11. இரண்டு அல்லது மூன்று பேர் மாத்திரம் பேசலாம் ஏன்? எங்கே ?
12. என்னைப் போல் இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும் என்று பவுல் யாருக்கு சொல்லுகிறார் ?
13. எதினாலன்றி இயேசுவை கர்த்தர் என்று சொல்லக் கூடாது ?
14. எது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது ?
15. அப்பத்தையும், இரசத்தையும் பானம் பண்ணும்போது எதை தெரிவிக்கிறோம் ?

## கடந்த மாத இதழுக்கு சரியான விடையளித்தவர்கள்

### சகோதரிகள்

1. Sr.Beryl Baskar - Padappai
2. Sr. Mary Gopinath - Katpadi
3. Sr. Meera Pandian - Trichy
4. Sr. Alice Augustine - Vellore
5. Sr. Buelah John - Vellore
6. Sr. Nadhya - Voorhees College - Vlr.
7. Sr. Sudha - Voorhes College, Vlr.
8. Sr. Preethi - Vellore
9. Sr. Jayaseeli Jeyaraj - Lalgudi
10. Sr. Shekina Nallamuthu - Vellore

### சகோதரர்கள்

1. Bro. C. Edward - Vellore
2. Bro. Yesudoss - Voorhes College Vellore
3. Bro. Godwin Premkumar - Voorhes College Vellore
4. Bro. Mastin Paul Rufuskumar - Katpadi
5. Bro. Abraham - Vellore

### கடந்த இதழின் கேள்விகளுக்கு சரியான விடைகள்

1. I கொரி 1 : 18
2. ரோமர் 14 : 10
3. I கொரி 3 : 17
4. ரோமர் 16 : 34
5. ரோமர் 12 : 1
6. I கொரி 2 : 11
7. ரோமர் 15 : 12
8. I கொரி 4 : 20
9. ரோமர் 13 : 3
10. I கொரி 5 : 8
11. ரோமர் 11 : 25
12. ரோமர் 14 : 17
13. ரோமர் 12 : 10
14. I கொரி 1 : 9
15. ரோமர் 11 : 4

## டிசம்பர் 2024 மாதத்திற்கான வாக்குத்தத்தம்

"அவர்களுக்கு நன்மை செய்யும்படி நான் அவர்கள் மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்த தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்."

(எரே 32 : 41)

Regd.under Newspaper RNI.No. TNTAM/2015/66320 & Posting under
Regd No. VL/031/2022-2024of senior Supdt. of Post Office / VLR
No. J/RNP/Chosen Generation/Dlgs dated at Vellore - 632 001 the 20.09.2021
Posted at HPO/Vellore on 30th or 31st of every month.

# செய்திச் சிதறல்

1. தீவிரவாதியை வெளியே அழைத்து செல்வதை தவிர்க்க ஏற்பாடு யாசின் மாலிக் வழக்கில் சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் புதிய வழிமுறை நேர்மையான விசாரணைக்கு வாய்ப்பளிப்பதை உறுதி செய்ய முடிவு.
2. பழைய பென்ஷன் அமல்படுத்த 2026 வரை நீண்ட போராட்டம் வி.பி.எஸ். இயக்கம் முடிவு.
3. நெதன்யாகு 'போர்குற்றவாளி' சர;வதேச கோர்ட் அறிவிப்பு.
4. சித்தராமையாவுக்கு இதுதான் கசி சட்டசபை தொடர் கர்நாடகா பாஜ தலைவர் சொல்கிறார்.
5. கோவில் நிலங்களை ஆக்கிரமித்த அதிகாரமிக்க நபர்கள் பட்டியல் தாக்கல் செய்ய அறநிலையத் துறைக்கு உத்தரவு.
6. அடுத்த உலக செஸ் சாம்பியன் யார்? சிங்கப்பூரில் டிங் லிரென், குகேஷ் மோதுகின்றனர்.
7. ஆசிய சாம்பியன் பட்டம் வென்ற இந்திய பெண்கள் அணிக்கு பரிசு.
8. ஓய்வு அதிகாரியிடம் ரூ.88 லட்சம் பறிப்பு. மும்பை போலீசாக நடித்த இளைஞர் கைது.
9. 5.1 கோடி வழக்குள் நிலுவையில் உள்ளன. விரைந்து முடிக்க நடவடிக்கை அவசியம் வேந்தர் கோ. விசுவநாதன் பேச்சு.
10. இந்தியாவை வழிக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்காவின் சதியே அதானி விவகாரம் ரஷ்ய ஊடகம் பகீர் தகவல்.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

**Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal**